தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-9-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**நாட்டு நலப்பணித்திட்டம் நல்ல தலைவர்களை உருவாக்குகிறது**

காருண்யா பல்கலை நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் பேச்சு நாட்டு நலப்பணித் திட்டத்தில் புதிதாக சேர்ந்த முதலாமாண்டு மாணவர்களுக்காக பல்கலைபட்டமளிப்பு விழா அரங்கில் 20-9-2014 அன்று நடந்தது. 400 மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். செல்வி. சௌமியாரவி, முதலாமாண்டு இளமறிவியல் தோட்டக்கலை மாணவி வரவேற்றார்.

நாட்டு நலப்பணிதிட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். கு.குமுதா அவர்கள் நாட்டுநலப்பணியின் முக்கியத்துவம் குறித்துக்கூறி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். புதிய முயற்சியாக ரத்ததானம், ஆளுமைத் திறன் மேம்பாடு, கல்வியறிவூட்டுதல், சமூக நலப்பணிகள், சுற்றுச்சூழல் மேம்பாடு, உடல்நலம் மற்றும் சுகாதாரம் ஆகிய குழுக்கள் ஏற்படுத்தி அதற்கான செயலர், துணைசெயலர், உறுப்பினர்களை முனைவர் மு.ரா.லதா நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் அறிமுகம் செய்தார். இதனால் நாட்டு நலப்பணி திட்டம் திறம்பட செயல்படவும், நிகழ்ச்சிகள் பயனுள்ளதாக அமைய வாய்ப்பாகும்.

முனைவர். எம்.ஆர்.சீனிவாசன், விடுதிக்காப்பாளர் மற்றும் முன்னாள் நாட்டுநலப்பணி திட்டஅலுவலர் அவர்கள் வேளாண் பல்கலை நாட்டு நலப்பணி திட்டமாணவர்கள் வேளாண்மை தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு கொண்டு செல்வதன் மூலம் நாட்டு முன்னேற்றதிற்க்கு சிறந்த தொண்டாற்றலாம் என்றார் .

காருண்யா பல்கலை நாட்டு நலப்பணி திட்டஒருங்கிணைப்பாளர் முனைவர். மகேஷ்பிரபு தனது சிறப்புரையில் மாணவர்கள் படித்து, வேலை பார்த்து, திருமணம் செய்து தன் குடும்பம் என்ற நோக்கு இல்லாமல் நாட்டுக்கு பணியாற்றும் நல்ல உருவாக விழைய வேண்டும். செல்வதன் வேளாண் பல்கலை அதற்கு மிகச்சிறந்த சந்தர்ப்பம் ஏற்படுத்தும் என்றார். திடமான எண்ணம், கூட்டுமுயற்சி, ஒருமுகப்படுத்தப்பட்ட மனம் மற்றும் நேரத்தை முறையாகப் பயன்படுத்துதல்

ஆகியவை நல்ல தலைமைக்கு அடையாளம் என்று கூறினார். பெற்றோர் மூத்தோர் ஆகியோருக்கு மரியாதை கொடுத்து அன்பாக நடத்தினால் வாழ்வில் நல்ல நிலையைஅடையாளம் என்றார். பின்னர் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள், நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவேறியது.

முன்னதாக செல்வன். அபிஷேக் நன்றியுரை கூறினார். விழாவில் நாட்டு நலப்பணி திட்டஅலுவலர்கள் லதா, ஹேமாபிரபா, குரு, வள்ளியம்மை, தாமரைசெல்வி மற்றும் வரதராஜ் பங்கேற்றனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்